# மவுண்ட் றூயிட் தமிழ் கல்வி நிலையம்

## Mount Druitt Tamil Study Centre

*Mobile: 0449 892 066*

*Email :*mtdruitttsc@gmail.com

*Web :* www.mtsc.org.au


பேச்சுப் போட்டி குறிப்பின் ஒலி வடிவத்திற்கு இந்த விரைவு எதிர்வினைக் குறியீட்டை வருடுக :

(குறிப்பு : இது ஒரு வழிகாட்டல் மட்டுமே. மாணவர்கள் தங்களது சொந்த வசன நடையில் இதனை பயின்று மேடையில் பேசுவதற்கு பெற்றோர்கள் ஊக்கப்படுத்தவும்)

# பேச்சுப் போட்டி 2021

## ஆண்டு 4

அனைவருக்கும் எனது அன்பான வணக்கம்

## ஊக்கமது கைவிடேல்

தன்னம்பிக்கை விதைக்கும் வைரவரிகள் இவை. ஆத்திசூடியில் ஔவையாரால் கூறப்பட்டுள்ள பொன்மொழி அது. ஊக்கம் என்றால் முயற்சி அல்லது இடைவிடாத உழைப்பு என்று பொருள். ஒருவன் தன் வாழ்வில் ஊக்கமுடையவனாக இல்லாவிட்டால், தன்னம்பிக்கையை இழப்பான்.

"முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்." என்றார் திருவள்ளுவர். முயற்சி இல்லாமல் எதுவும் இல்லை. இடைவிடாத முயற்சிதான் ஒருவனது வெற்றிக்கு காரணமாக அமையும்.

"தூங்காதே தம்பி தூங்காதே! நீ சோம்பேறி என்ற பெயர் வாங்காதே!!" என்ற பாடல் அதனைத்தெளிவாகக் கூறுகிறது. உங்களது வெற்றியின் இரகசியம் என்ன? என்று உலகத்தலைவர்களிடம் கேளுங்கள். புரியும்.

வாழ்வின் முன்னேற்றத்திற்கு இலட்சியமும், பின் அதனை அடைவதற்கு, விடாமுயற்சியும் அவசியமாகும்.

முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்!

உன்னால் முடியும். உன்னை நம்பு. தட்டிக்கொடு! தடைகளைத் தாண்டி தரணியை வெல்லலாம்!

நன்றி, வணக்கம்.



ஆக்கம்: ஆசிரியர் திருமதி. விஜயசுதா குகனேஸ்வரன்.

**பேச்சுப் போட்டி எதிர்வரும் 29.05.2021 அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.**